[14th July 1962

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

திரு. அ. பெ. தருமலிங்கம் : On a point of personal explanation Sir, கேள்வி 306-ஈ-யில் தான் ஒரு துணைக்கேள்வி கேட்டபொழுது, கனம் அமைச்சர் அவர்கள், "கேள்வியை நன்றாகத்தெரிந்து சொல்லுங்கள்" என்றார். கேள்வித்தாளிலே "தோட்டிகளுக்கு சம்பள உயர்வும், பிரயாணப் படியும்" என்று போடப்பட்டிருக்கிறது. கிராமாதிகாரிகளிடம் வேலை செய்பவர்களை "வெட்டிகள்" அல்லது "வெட்டியான்கள்" என்று சொல்லுகிறோம்.

கனம் சபாநாயகர் : சில ஊர்களிலே "வெட்டியான்கள்" என்று சொல்லுகிறார்கள், சில ஊர்களிலே "தோட்டிகள்" என்று சொல்லுகிறார்கள். கேள்வியிலே "தோட்டிகள்" என்று தான் சொல்லியிருக்கிறார்கள். மொழி பெயர்ப்பிலே தப்பு ஏற்பட்டிருக்கிறது. உங்கள் பேரில் தப்பு ஒன்றும் இல்லை **No explanation is necessary.**

II.—ADJOURNMENT MOTION *re* SITUATION IN THE POLYTECHNIC AT VIRUDHUNAGAR.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion to discuss the situation arising from the discontent among the students of the Polytechnic at Virudhunagar as a result of the failure of the management to redress their grievances. He may speak now.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, விருதுநகர் பாலிடெக்னிக்கிலுள்ள மாணவர்கள் ஹாஸ்டல் குறைகளின் காரணமாக அதிருப்தி அடைந்து, நிர்வாகஸ்தர்களுக்குத் தெரிவித்தும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை என்ற காரணத்தினால், அங்கு சூழ்நிலை சரியில்லாமல் இருக்கிறது, உண்ணாவிரதம் போன்ற தகராறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. நிலைமை மோசமாவதற்கு முன்னர் இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வந்து, கலெக்டரை அனுப்பிவைத்து, கூடிய சீக்கிரம் சமரசம் செய்ய வேண்டும் என்ற யோசனையைக் கூறவேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாக சர்க்காருக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை. கனம் அங்கத்தினர் ஒரு ஷார்ட் நோட்டீஸ் கேள்வி போட்டால், உடனடியாக அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைத் தயாரித்து நிலைமையை விளக்கிச் சொல்லுகிறேன். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அதையும் எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I withhold my consent for the adjournment motion.

III.—CALLING ATTENTION TO COLLECTION OF LOANS FROM THE RYOTS IN TIRUPPATTUR TALUK.

MR. SPEAKER : The hon. Member Sri S. Madhavan will call the attention of the Hon. Minister for works to a matter of urgent public importance, namely the collection of loans from the